# திராவிட சினிமா

20

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

## மீனவர் சமூகம் மீதான ஒடுக்குமுறை பேசிய 'குறவஞ்சி'

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

படங்கள் உதவி : ஞானம்





திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உருவாக்கிய திரைப்படங்கள் குறித்த திரைப்பட ஆய்வாளர்களின் பார்வை மிகவும் தட்டையானதாக இருப்பதே வழக்கம். ஒன்றிரண்டு விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை.

திராவிட அறிஞர், பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் போன்றோர் இந்த ஆய்வுக்களத்தில் தடம் பதித்து பலருக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளனர். அவரது **'பராசக்தி – ஒரு தி.மு.க. சினிமா'** என்ற ஆய்வுக் கட்டுரை இணை யற்றது. ஆனாலும் அவரே திராவிட சினிமாக்களில், வரலாற்றுப் புனைவு சினிமாக்கள் மீது கவனம் செலுத்தவில்லை என்று சொல்லலாம்.

திராவிட வரலாற்றுப் புனைவுகள் தமிழ்ப் பழமையைக் கொண்டாடியவை என்ற எண்ணத்தை அவர் விமர்சனப்பூர்வமாக அணுகியிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். ஏற்கெனவே கண்டது போல அறிஞர் அண்ணா, தான் பணியாற்றிய திரைப்படங்களில் வரலாற்றுப் புனைவுகளை ஒருபோதும் கையாளவில்லை.

### ஆட்சிமுறையும் சாதியமும்

திரைப்படங்களில் பெரும்பான்மையாக வரலாற்றுப் புனைவுகளைக் கையாண்டது கலைஞர் மட்டுமே. தொடர்ந்து வெற்றிகரமான படங்களை உருவாக்குவதில் பங்கேற்ற கலைஞர், தமிழ்ப் பழமையைப் பெருமிதமாகப் பேசும் வர லாற்றுப் புனைவுகளை ஒருபோதும் உருவாக்கவில்லை என்பது கவனத்துக்குரியது. அதற்கான அருமையான எடுத்துக்காட்டு **'குறவஞ்சி'** திரைப்படம்.

இந்தத் திரைப்படம், ஆட்சிமுறை மற்றும் சமூகத்தில் நிலவும் சாதியம் எனும் இரண்டு களங்களில் இயங்குகிறது. சமூகமும் அரசியலும் இணைந்தே இயங்குபவை. இன்னும் சொல்லப் போனால் அரண்மனை / ஆட்சி அரசியல் ஆகியவை சமூக தாக்கமற்று இயங்குவதில்லை.

இங்கு அரசியல் என்பதை ஆட்சியின் போக்கை நிர்ணயிக்கும் சதி உள்ளிட்ட நடவடிக்கையாகவும், சமூக இயக்கம் என்பதை அதனுள் இயங்கும், ஆட்சியின் ஆசீர்வாதத்துடன், சாதிய சமூகத்தின் மேல் கீழ் இழிவையும் பேசுவதாகக் குறித்துக் கொள்வோம்.

### மீனவர் சமூகத்தின் மீது வன்முறை

1960–ஆம் ஆண்டு சிவாஜி கணேசன், சாவித்திரி, மைனாவதி, பண்டரிபாய், ஓ.ஏ.கே.தேவர் ஆகியோர் நடிப்பில் காசிலிங்கம் இயக்கத்தில் வெளிவந்தது 'குறவஞ்சி' திரைப்படம்.

தென்பாண்டிக் கோவின் ஆட்சியில், எல்லை யோரப் பகுதிகளில் அவரது தம்பி முராரியும், அவனது தளபதி இமையா ஆகியோரின் காட்டாட்சி தர்பார் நடக்கிறது. எல்லைப்புறமாக அடையாளங் காட்டப்படுவது மீனவர் வாழும் பூமி. அந்த உழைப்பாளிகள் மீது கடுமையான வரிச்சுமை சுமத்தப்படுகிறது. 'ம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்'. இன்னும் கொடூரம், பெண்டிர் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறை.

அவர்களை அடக்கும் வேலையில் கதிரவனும், அவனுக்குத் துணையாக இளவரசி குமரியும் பணிக்கப்படுகிறார்கள். குமரி அவனைக் காதலிப்பவள் என்ற போதும் கதிரவனின் காதல் வஞ்சி எனும் மீனவப்பெண் மீது. எல்லையோர ஆட்சியாளர்களின் அட்டுழியங்களுக்கு எதிராகப் போராட மக்களைத் தயார் செய்யும் பணியில் ஓரளவில் வெற்றியும் கிட்டுகிறது.

ஆட்சியாளர்களின் சதிவலையை அம்பலப்படுத்தும் தடயம் தடம் புரளும் போது, குமரியைச் சந்தேகித்து விலக்குகிறான் கதிரவன். அவன் மீதான காதல் தோல்வியில் துரோகத்துக்கு இடமில்லையெனும் அவளது வாதத்தை கதிரவன் நிராகரிக்கிறான். இடையே ஆதிக்க சாதியில் பிறந்தவனான கதிரவன் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த வஞ்சியை மணப்பதற்கு ராஜங்க சட்டத்தில் இடமில்லை. மீறி நடந்தால் மரணதண்டனை என அறிவிக்கப்படுகிறது.

### தலைக்கும் காலுக்கும் உறவு?

திரைப்படம் அன்றைய மன்னர் கால ஆட்சி முறையில் எல்லைப்புற மற்றும் ஆட்சிமையத்துக்குத் தொலைவிலிருக்கும் பகுதிகள் கவன வெளிக்கு அப்பால் இருந்தன என்பதைப் பேசுவதன் வழியாக, சமகால ஆட்சிகளிலும் தொடரும் மீனவர் சமூகங்கள் போன்றவற்றின் ஒதுக்குதலை, ஒடுக்குதலைப் பேச முனைகிறது.

அனைத்து விதமான ஆட்சிமுறைகளிலும், அதாவது மன்னராட்சியானாலும், மக்களாட்சி யானாலும் விளிம்புநிலை மாந்தர் வாழ்வு குறித்த அக்கறையற்றே இருக்கிறது என்பது பார்வை. ஆனால் திரைப்படத்தில் கூடுதலான கவனத்தை ஈர்ப்பது சாதி முரண் குறித்த விவாதம். தமிழ்த் திரைப்படங்களில் நேர்மையான அக்கறையோடு சாதி மேல் கீழ் மற்றும் அதன் மூலம், இயக்கங்கள் குறித்து விரிவாகப் பேசியது கலைஞர் மட்டுமே என உறுதியாகச் சொல்லலாம்.

கவனமாகப் பார்த்தால் இந்த வரலாற்றுப் புனைவில் எத்தனை நுட்பமாக சாதியைக் குறித்த விவாதத்தை கலைஞர் முன்வைத்திருக்கிறார் என்பது தெரியும். கதை நாயகன் கதிரவன், அவனைக் காதலிக்கும் மன்னர் மகள் குமரியிடம் அவள் மீது தனக்கு அந்தவிதமான உணர்வு தோன்றவில்லை என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு, தடை செய்யப்பட்ட சாதி அமைப்பைச் சார்ந்த வஞ்சியிடம் காதல் கொள்கி றான்.

> **'விலங்கு மனிதர்களை ஒடுக்க தெய்வம் வராது, தெய்வத்தால் அனுப்பப்பட்டவர்கள் என நினைத்துக் கொண்டு பணிபுரிந்தால்தான் நாட்டின் வாழ்வின் நலிவு தீரும்!'**

### சாதி என்ன குடும்பச் சொத்தா?

எல்லைப்புற மக்கள் இடர் தீர்க்கும் பணியிலும், சாதி இழிவுக்கு எதிராகவும் கதிரவன் குரலில் ஒலிக்கும் கலைஞர் வசனங்கள் உணர்ச்சியும், பொருட்செறிவும் கொண்டவை. 'நெருப்புக்கு ஏன் பஞ்சு மெத்தை, இந்த நீதியற்ற ஆட்சிக்கேன் மணிவிழா.... நெறியற்ற வாழ்வும் நேர்மையற்ற செங்கோலும் எத்தனை நாளைக்கு நிலைக்கும்'; 'நாசக்காரர்களை நயவஞ்சகர்களை, நாட்டை காடாக்கி அடக்கி ஒடுக்கும் விலங்கு மனிதர்களை ஒடுக்க தெய்வம் வராது, தெய்வத்தால் அனுப்பப்பட்டவர்கள் என நினைத்துக் கொண்டு பணிபுரிந்தால்தான் நாட்டின் வாழ்வின் நலிவு தீரும்' ; 'தலைக்கும் காலுக்கும் வெகுதூரமென்று கவனியாது இருந்துவிட்டால் பிறகு உயிருக்கே ஆபத்தாகிவிடும்'; 'மகுடபதி....... மண்ணாங்கட்டி. மக்களை நிம்மதியாக வாழ வைக்க முடியாத வர்களுக்கு, மாபாவிகளைத் தண்டிக்க முடியாத மரப் பொம்மைகளுக்கு தலையிலே மகுடம், மகுடத்துக்கு ஒரு மதிப்பு' என வசனங்களில் நெருப்புப் பொறி பறக்கும் (இங்கே இதனை இறையாண்மை / SOVEREIGN எனவே பொருள் கொள்ள வேண்டும்).

இதே வகையில் சாதியத்துக்கு எதிரான கதிரவன் குரலும் புதுமையானது. அவ்வளவு நேரடியான குரல் அதுவரை ஒலித்திருக்குமா என்பது ஐயமே.

'இந்த ஜாதி எங்கிருந்து வந்தது. இது நம் பரம்பரைச் சொத்தா அல்லது படையெடுத்துப் புகுந்ததா? நமது இலக்கியத்தில், காவியங்களில் நமது அகராதிகளில் இல்லாதது இந்த ஜாதி'; 'ஜாதி மேல் கீழ் இருக்க வேண்டுமென ஒரு சட்டம் இருக்குமானால் அது அரசாங்கத்தின் பெயரால் இருந்தாலும், ஆண்டவன் பெயரில் இருந்தாலும் அதை எதிர்க்கத் துணிவேன் நான் மட்டுமல்ல மக்களைத் திரட்டி'; 'மேல் கீழ் எனும் ஜாதி அமைப்பை பேச்சால், எழுத்தால், எண்ணத்தால் மாற்றியமைக்க யார் முன்வந்தாலும் தலை வணங்குகிறேன்'; 'ஜாதித் தடை மீறிய திருமணத்திற்கு மரண தண்டனை என்றால் எங்கள் மரண ஒலியோடு உங்கள் ஜாதிச் சனியனும் ஒழியட்டும்'; 'ஒருநாள் ஜாதி ஒழியப் போகிறது அறிவின் ஜோதியில்' என்பார்.

திரைப்படத்தின் இறுதியில் குமரியின் முயற்சியால் மக்கள் எழுச்சி ஏற்பட்டு அயோக்கிய ஆட்சியாளர்களை அடக்குகிறது. ஆனால் வஞ்சி மரித்துப் போகிறாள். அவளது உடல் சுமந்து போகும் கதிரவன் ஜாதி ஒழிப்புப் போரைத் தொடர வருவேன் என்கிறான். கலைஞர் திராவிட சிந்தனைகளை குறவஞ்சி ( சிவாஜி ) அரசிளங்குமரி ( ஜெமினி ) போன்ற காங்கிரஸ் ஆதரவு நடிகர்கள் மூலமாகவும் பேசியிருக்கிறார்.

...படம் விரியும்

## சனாதனக் கல்வி – புதைகுழியில் மாணவர்கள்!

சனாதனத்துக்கு எதிராக சமூகநீதி இயக்கங்கள் நடத்திய போராட்டங்களே இன்று, இந்தியாவில் நாம் கண்டுள்ள அனைத்து நவீன வளர்ச்சிகளுக்கும் காரணமாக உள்ளன. பிறப்பின் அடிப்படையிலான சாதியக் கட்டமைப்பு மாறாமல் பாதுகாக்க வேண்டும் என்கிற சனாதனம், ஒருசாரருக்கு மட்டுமே வாய்ப்புகளை வழங்கியது.

இந்த நிலையில், இந்த வளர்ச்சி மாற்றத்தினை மீண்டும் தொடங்கிய இடத்துக்கே கொண்டு செல்லத் துடிக்கிறது சனாதனம் பேசுவோரின் அரசியல்.

குஜராத்தின், பரோடாவில் உள்ள 'மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகம்' சனாதன தர்மம் குறித்துப் பட்டப்படிப்பைத் தொடங்குகிறது. சனாதனத்தின் வரலாறு, அதன் கலாச்சாரம் ஆகியவற்றைக் கற்பிக்க உள்ளதாம். செயற்கை நுண்ணறிவுக் காலத்தில், சனாதனத்தைப் படிக்க மாணவர்களை ஊக்குவிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

சமூகநீதி, பகுத்தறிவு, சமதர்மத்துக்கு நேரெதிரானது சனாதன தர்மம். சனாதன தர்மம் வலியுறுத்தும் இந்தச் சாதியக் கட்டமைப்பை ஒழிக்க வேண்டும் என்றுதான், சமூகநீதித் தலைவர்கள், இயக்கங்கள் இந்தியாவில் கடும் போராட்டங்களை முன்னெடுத்தன. இந்த நிலையில் மாணவர்களின் எதிர்காலத்தைப் புதைகுழியில் தள்ளத் துடிக்கிறது 'குஜராத் மாடல்' கல்வி. இந்தியாவைப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னுக்கு இழுத்த, ஆக்கத் திட்டங்களற்ற குஜராத் மாடல் பா.ஜ.க. அரசில் இது எதிர்பார்த்தது தான். மாணவர்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

## :.ப்ளாஷ்பேக்



### பேறறிஞரிடம் நிதி!



நடராஜ்

1966-ஆம் ஆண்டு பேறறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் சென்று திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் நிதி சேகரித்தார். ஒருங்கிணைந்த கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், திரு முருகன்பூண்டி பேரூர்க் கழகம் அம்மாபாளையம் கிளைக் கழகத்தின் சார்பாக ரூபாய் 801 நிதி திரட்டி, பேறறிஞர் அண்ணாவிடம் கிளைச் செயலாளர் என்ற முறையில் நான் வழங்கினேன். அன்றைய கோவை மாவட்டச் செயலாளராக இருந்த புளியம்பட்டி சுவாமிநாதன் அவர்களிடம் அந்த நிதியை ஒப்படைத்தார் பேறறிஞர் அண்ணா. அப்படியான தருணத்தில் இப்படம் எடுக்கப்பட்டது.

**-மு. நடராஜ், மாவட்ட முன்னாள் பிரதிநிதி திருமுருகன்பூண்டி நகரம், திருப்பூர் வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முடக்கப்பட்ட கூட்டுறவு

**1976 -ஆம் ஆண்டு, கழக ஆட்சியில் தலைவர்கள் பொறுப்பில் இயங்கிய கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்ட பிறகு, அதிகாரிகள் பொறுப்பில் அவை செயல்பட்டன. அதன் பின்னர், அமைந்த ஆட்சிகளில் கூட்டுறவுச் சங்கங்க ளுக்குத் தேர்தல் நடத்துவதில், பெரும் இடைவெளி விழுந்தது. மீண்டும் 1989-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் கூட்டுறவுச் சங்கங்க ளுக்கு முறையாகத் தேர்தல்கள் நடைபெறத் தொடங்கின. அடுத்த கட்டத் தேர்தல்கள் நடைபெறுவதற்குள் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும் அமைந்த அ.தி.மு.க. அரசு, கூட்டுறவுச் சங்கங்களை முடக்கியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 220




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131